தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 26
இதழ் 06
அக்டோபர் 2024

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்



## மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
## திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில்

## மாநில அளவிலான மணிமேகலை விருதுகள், வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் வங்கியாளர் விருதுகள் வழங்கும் விழா



**ககன் தீப் சிங் பேடி,** இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

# வாழ்த்துரை

ஒரு பெண், யார் உதவியையும் எதிர்பார்த்துக் காத்திருக்காமல் அவரவர்கள் சொந்தக் காலில் நின்று அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு அடித்தளம் அமைத்து தந்தது மகளிர் சுய உதவிக் குழு இயக்கம். இன்றைக்கு இந்த இயக்கம் பெற்றுள்ள வெற்றியானது நமது மாநிலத்தைக் கடந்து பிற மாநிலங்களிலும் சுய உதவிக் குழுக்கள் தொடங்க காரணமாக இருக்கிறது என்பது நமக்குக் கிடைத்த பெருமை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சிக்கும், இயக்கத்தில் இணைந்துள்ள மகளிரின் பொருளாதார சுய சார்பிற்கும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்தத் திட்டங்களில் முதன்மையானது வங்கிக் கடன் இணைப்பாகும்.

கடந்த மாதம் மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், மாநில அளவில் 31,220 மகளிர் சுய உதவிக் குழுக்களை சார்ந்த 3,74,277 மகளிருக்கு ரூ.2874.26 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 1013 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.108 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார். இதன் மூலம் சுய உதவிக் குழுக்கள் பொருளாதார வலிமை பெற முடியும்.

இந்த வாய்ப்புகளை நல்ல முறையில் பயன்படுத்தி தொழில் முனைவோர்களாக மட்டுமல்ல – தன்னம்பிக்கை நிறைந்தவர்களாக அனைத்து மகளிரும் உயர வேண்டும். உங்களின் உயர்வுக்கு நம் தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும் என்றும் துணை நிற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம் !!!

அன்புடன்,

(ககன்தீப் சிங் பேடி)

திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்



அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

அனைவரின் வாழ்விலும் "வறுமை எனும் இருள் நீங்கி, வளமை எனும் ஒளி பிறந்திட" என் இனிய தீப ஒளித் திருநாள் வாழ்த்துகளை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ள சுய உதவிக் குழு இயக்கத்தின் செயல்பாட்டில் நானும் ஒரு அங்கம் என்பதை நினைத்து பெருமை கொள்ளும் எனக்கு, மாதந்தோறும் என் மனதில் தோன்றும் கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனக்கு பெரிதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

பல்வேறு சாதனைகளுக்கு உரியவர்களான உங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் ஊக்கமளித்திடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, கடந்த மாதம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் உள்ள சுமார் 3 இலட்சத்து 74 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு மகளிர் பயன்பெறும் வகையில் ரூ. 2874.26 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கியுள்ளார்.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்குவதைப் போல, அவர்களின் செயல்பாடுகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையிலும், அவர்களைப் பெருமைப்படுத்திடும் வகையிலும் மணிமேகலை விருதுகளும், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்குவதில் சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கு வங்கியாளர் விருதுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இவைகள் மட்டுமின்றி கடந்த ஆண்டுகளைப் போலவே சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையில், நவராத்திரி விற்பனைக் கண்காட்சி நமது அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்வாறான பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றிடும் ஆக்கப்பூர்வமான பணிகளில் நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

அடுப்படியே உலகம் என இருந்த பெண்கள் இன்று ஆணுக்கு நிகராக அனைத்துத் துறையிலும் சாதனை படைக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளதற்கு முன்னத்தி ஏராக செயல்படும் உங்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

(ச. திவ்யதர்சினி)



திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

அனைத்துத் துறைகளிலும் தங்களின் ஆளுமையையும், திறமையையும் வெளிப்படுத்தி, திறன்மிகு தொழிலாளர்களாகவும், சிறந்த தொழில் முனைவோர்களாகவும் திகழ்ந்து வரும் உங்கள் அனைவருக்கும் என் இனிய வணக்கம். சுய உதவிக் குழு மகளிரின் தோழியான முற்றம் இதழ் மூலம் மாதந்தோறும் உங்களை சந்தித்து கலந்துரையாடுவது எனக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது.

ஏழ்மையை போக்கிடவும், பெண்கள் பொருளாதார சுய சார்பு பெற்றிடவும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களில் மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்ற இயக்கமாக நம்முடைய சுய உதவிக் குழு இயக்கம் இருப்பது நமக்கு பெருமை தரும் ஒன்றாகும்.

சுய உதவிக் குழு மகளிரின் முன்னேற்றத்திற்கு ஆக்கப்பூர்வமான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

சுய உதவிக் குழுக்களின் பொருளாதார பற்றாக்குறையைப் போக்கிட, அவைகளுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதன் மூலம் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வாய்ப்பு ஏற்படுத்துவதுடன், சுய உதவிக் குழுவினரை தொழில் முனைவோர்களாக்கிடவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு பெரிய அளவில் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி தந்திட இணைய வசதிகளை ஏற்படுத்தி தருவதிலும் நாம் இன்று சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளோம். உங்களின் செயல்பாடுகள் மேலும் மேலும் தொடர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். எனது விருப்பத்தை நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு.

இன்னும் சில நாட்களில் பருவமழை தொடங்க உள்ளது. வான் தரும் கொடையான மழை நீரை வீணாக்காமல் முறையாக சேமித்து வைத்திடும் நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். குடும்பத்தை காக்கும் பெண்களால்தான் ஊரையும், நாட்டையும் காக்க முடியும் என்பதை மீண்டும் நீங்கள் நிரூபித்திட வேண்டும்.

உங்களின் செயல்பாடுகள் மேலும் சிறப்பாக இருக்க வேண்டும் பலருக்கு வழிகாட்டியாக சுய உதவிக் குழு இயக்கம் திகழ வேண்டும். உங்களில் சாதனைகள் தொடர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு, உங்கள் அனைவருக்கும் தீப ஒளித் திருநாள் வாழ்த்துகளை கூறிக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

ஸ்ரேயா

(ஸ்ரேயா பி சிங்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக்குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக்குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.


மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com



tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial


“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்டாகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்..”

## குறளும் – பொருளும்

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்ப தறிவு**

– (குறள்: 422)

*மனம் போகும் வழியெல்லாம் போக விடாமல் தீய வழிகளைத் தள்ளிவிட்டு, நல்வழியைத் தேர்வு செய்வதேஅறிவுடைமையாகும்.*

# உள்ளே...



7 மாநில மேம்பாட்டுக்கான மகத்தான பயணம்


20 உணவு திருவிழா மற்றும் கல்லூரி சந்தை


8 நான்கு புதிய அமைச்சர்கள் பதவியேற்பு


33 உடல் நலம் காப்போம்...


12 வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் விழா


34 பாசிப் பருப்பு பூரி


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

விலை ரூ. 20/– • மலர் 26 • இதழ் 06 • அக்டோபர் 2024

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். தெய்வநாயகி,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி,** DRO / பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்'**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

## வறுமை ஒழிப்பு கருவி...



*அன்புள்ள வாசகர்களுக்கு,*

அனைத்து உலக நாடுகளுக்கும் தேவையான, அத்தியாவசியமான 15 அம்சங்களை தேர்வு செய்து, அவற்றை 2030–ம் ஆண்டிற்குள் நிலைத்த வளர்ச்சிக்கான இலக்காக ஐக்கிய நாடுகளின் சபை நிர்ணயித்துள்ளது. இந்த இலக்குகளில் ஒன்று வறுமை ஒழிப்பு ஆகும். இந்த முக்கிய இலக்கான வறுமை நிலையாக ஒழிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வருகின்றது. இதற்காக அனைத்து நாடுகளும் தனி கவனம் செலுத்தி இந்த இலக்கினை அடைவதை நோக்கி செயல்பட வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளது.

நமது நாட்டில் பல்வேறு வறுமை ஒழிப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டம், பொது விநியோக கடைகள் மூலம் அத்தியாவசிய உணவு பொருட்கள் வழங்கும் திட்டம், முதியோர் மற்றும் விதவைகளுக்கான ஓய்வூதியத் திட்டம் போன்ற திட்டங்கள் வறுமை ஒழிப்பிற்கு முக்கிய பங்களிப்பு அளிக்கின்றன.

தமிழ்நாட்டில் வறுமை ஒழிப்பிற்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் அளித்து வரும் பங்களிப்பை யாராலும் மறுக்க முடியாது. சிறுசேமிப்பு, சிறு கடன்கள், சிறு தொழில்கள், சிறு காப்பீடுகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளை சாமான்ய மக்களிடம் எளிதாக எடுத்து செல்லும் ஊர்தியாக சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் இயங்கி வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் நாட்டிலேயே முன்மாதிரியான குழுக்களாக செயல்பட்டு, ஏழை எளிய குடும்பங்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் கருவியாக செயல்படுகிறது என பலராலும் போற்றப்பட்டு வருகின்றது.

வறுமை ஒழிப்பு தினத்தை அனுசரிக்கும் அக்டோபர் மாதத்தில் சுய உதவிக் குழுக்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். அதோடு, முறைப்படுத்தப்படவும் வேண்டும். இதன் மூலம் குழு உறுப்பினர்கள் அனைவரும் வறுமையில் இருந்து விடுபடுவதற்கு உறுதுணையாக இருக்குமென நம்பப்படுகின்றது. வறுமை ஒழிப்பு என்பது ஒரு கருணையுள்ள மனிதாபிமான செயல்பாடாகும்.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்




**தமிழ்நாட்டிற்கு** புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 28.08.2024 முதல் 12.09.2024 வரை அமெரிக்க நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு 14.09.2024 அன்று சென்னை திரும்பினார்.

இந்த பயணத்தில் சான்பிரான்சிஸ்கோவில் 8 நிறுவனங்களுடனும், சிகாகோவில் 11 நிறுவனங்களுடனும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இந்த 19 ஒப்பந்தங்கள் மூலமாக 7 ஆயிரத்து 616 கோடி முதலீடு தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறது. இதன் மூலம் 11 ஆயிரத்து 516 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.




# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின்படி, திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு துணை முதலமைச்சராகவும் மற்றும் நான்கு அமைச்சர்களும் பதவியேற்பு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் பரிந்துரையின்படி, தமிழ்நாடு அமைச்சரவை 28.09.2024 அன்று மாற்றம் செய்யப்பட்டு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுமேம்பாட்டுத்துறைஅமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராகவும், புதிதாக நான்கு அமைச்சர்களை நியமித்தும், ஆறு அமைச்சர்களுக்கு இலாகாக்கள் மாற்றம் செய்தும் மாண்புமிகு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் ஒப்புதல் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து அன்று 29.09.2024 அன்று ஆளுநர் மாளிகையில், நடைபெற்ற பதவியேற்பு விழாவின்போது, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்களிடம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், புதிய அமைச்சர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், திரு.வி.செந்தில் பாலாஜி அவர்களுக்கு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சராகவும், திரு.சா.மு.நாசர் அவர்களுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சராகவும், முனைவர். கோவி.செழியன் அவர்களுக்கு உயர்கல்வித் துறை அமைச்சராகவும், திரு.ஆர்.இராஜேந்திரன் அவர்களுக்கு சுற்றுலாத் துறை அமைச்சராகவும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். மேலும் ஆறு அமைச்சர்களின் இலாகாக்களும் மாற்றி அமைக்கப்பட்டன.


இதனைத் தொடர்ந்து, ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்களுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை, குழு புகைப்படம் எடுத்துக் கொண்டது.

இப்பதவியேற்பு விழாவின்போது, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், கூட்டணிக் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர், தலைமைச் செயலாளர் திரு.நா. முருகானந்தம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■



# மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்





**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மாநில அளவிலான மணிமேகலை விருதுகள் நகர்ப்புர மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் மறுறும் வங்கியாளர் விருதுகளை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 30.09.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் ஊரகம் மற்றும் நகர்ப்புரங்களில் சிறப்பாக செயல்படும் 70 சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு 2022-23 மற்றும் 2023-24ஆம் ஆண்டுகளுக்கான மணிமேகலை விருதுகள் மற்றும் ரூ. 1 கோடியே 18 இலட்சம் விருதுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் 516 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 6,135 உறுப்பினர்களுக்கு ரூ.30.20 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதில் சிறப்பாக செயல்படும் 13 வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கு வங்கியாளர் விருதுகளையும் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

## மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது

“தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் நான் பங்கேற்கும் முதல் நிகழ்ச்சியே மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளை கௌரவிக்கின்ற நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. ஏதாவது, பட்டமோ, பரிசோ கிடைத்தால், அதை முதலில் தன் தாயிடம் தான் காட்ட வேண்டும் என்று, ஓடி வரும் பிள்ளையைப் போல, தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் எனும் மாபெரும் பொறுப்பை ஏற்ற பின், தாய்மார்களான உங்களை காண வருகை தந்திருக்கிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறந்த முறையில் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கி ஊக்குவிக்கும் வங்கிகளுக்கான







வங்கியாளர் விருதினை இந்த சிறப்பான நிகழ்ச்சியில் வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எனக்கு எல்லா வகையில் ஒத்துழைப்பு வழங்கி வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அனைத்து நிலை அதிகாரிகள் அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த சகோதரிகள் அனைவருக்கும் நன்றியினை கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுமார் 4 லட்சத்து 73 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே மகளிர் மேம்பாட்டிற்கு எடுத்துக்காட்டான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்றால், அதற்காக உங்கள் அனைவரையும் நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.



நமது திராவிட மாடல் அரசு பொறுப்புக்கு வந்த 2021-2022 ஆம் ஆண்டு 21 ஆயிரத்து 392 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டது. அதற்கு அடுத்து 2022-2023 ஆம் ஆண்டு 25 ஆயிரத்து 642 கோடியும், சென்ற ஆண்டு 30 ஆயிரத்து 74 கோடி ரூபாய் வங்கி கடன் இணைப்பு சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் இலக்கைவிட அதிக அளவு கடன் வழங்கி சாதனை படைப்போம் என்கிற நம்பிக்கையுடன் செயல்பட்டு வருகிறோம். எனவே, மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்துவதை நாம் கடமையாகக் கருதுகிறோம். அந்த வகையில், சிறப்பாக செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2022-23 மற்றும் 2023-24ஆம் ஆண்டுக்கான மணிமேகலை விருதுகளைப் பெற்றுள்ள, சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கும், வங்கிக் கடன் இணைப்புகளைப் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் சிறப்பாக செயல்பட்டு விருதுகளைப் பெற்ற வங்கியாளர்களுக்கும் பாராட்டினையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிக்குப் பின்னர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன், மணிமேகலை விருதுகளைப் பெற்ற மகளிர் சுய உதவிக் குழுவினர் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. எம். மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வங்கியாளர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


TNRISE
மணிமேகலை விருதுகள் - 2022-23


TNRISE


EMERGENCY EXIT



## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு

# வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் விழா

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மாநில அளவில் 31,220 மகளிர் சுய உதவி குழுக்களை சார்ந்த 3,74,277 மகளிர்க்கு ரூ.2874.26 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, 12,233 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள், 1013 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.108 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் இணைப்புகள் என 25,000க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு 298 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 09.09.2024 அன்று மதுரை மாவட்டம், கிழக்கு ஊராட்சி ஒன்றியம், யா.ஒத்தக்கடை ஊராட்சியில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மாநில அளவில் 31,220 மகளிர் சுய உதவிக் குழுக்களை சார்ந்த 3,74,277 மகளிர்க்கு ரூ.2874.26 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, மதுரை மாவட்டத்தில் வருவாய்த் துறையின் மூலம் 12,233 பயனாளிகளுக்கு ரூபாய் 75 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டாக்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக மாவட்டத்தில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள 1013 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.108 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் சார்பாக 25,000க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு சுமார் ரூ.298 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முன்னதாக மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், விழா அரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் கண்காட்சியைப் பார்வையிட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பற்றி சுய உதவிக் குழுவினரிடம் கேட்டறிந்தார்.

இவ்விழாவில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி எம்.எஸ்.சங்கீதா, இ.ஆ.ப., மதுரை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மதுரை மாவட்ட மகளிர் திட்டத்தின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கினர்.



## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மாநில அளவில்

# வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கும் விழா

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 09.09.2024 அன்று மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக மாநில அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2874.26 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வினைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கினர்.



திருச்சிராப்பள்ளி



திண்டுக்கல்



விழுப்புரம்



திருவண்ணாமலை




அரியலூர்



கரூர்



நாகப்பட்டிணம்



புதுக்கோட்டை




கோயம்புத்தூர்



சிவகங்கை



ராமநாதபுரம்



நீலகிரி



ராணிப்பேட்டை



திருநெல்வேலி



தேனி




கள்ளக்குறிச்சி



தருமபுரி




கிருஷ்ணகிரி



கன்னியாகுமரி

## முதியோர் சுய உதவிக் குழுவினருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குதல்



உலக முதியோர் தினத்தை முன்னிட்டு 01.10.2024 அன்று விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். வி.பி. ஜெயசீலன்,இ.ஆ.ப.,அவர்கள்,விருதுநகர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படும் முதியோர் குழு உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பு செய்தார்.




# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், 12.09.2024 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள், நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்புகள், சுழல் நிதி, இளைஞர்களுக்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகள் குறித்தும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் இல்லம் தேடி கல்வி ஆகிய திட்டங்களில் சுய உதவிக் குழு மகளிரின் பங்களிப்பு மற்றும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்திட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், அடைய வேண்டிய இலக்குகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், 2024-2025 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் போன்றவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அனைத்து மாவட்ட மகளிர் திட்ட திட்ட இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அத்திட்டங்களின் பயனாக இன்று சுய உதவிக் குழுவினர் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, வருவாய் ஈட்டி, பொருளாதார சுயசார்பு பெற்று வருகின்றனர்.

சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரியவிலைகிடைக்கவேண்டும்என்றநோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நவராத்திரியை முன்னிட்டு, சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் நவராத்திரி விற்பனைக் கண்காட்சியினை, திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் 21.09.2024 அன்று துவக்கி வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்

முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து கிராமிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

21.09.2024 முதல் 06.10.2024 வரை நடைபெற்ற இக்கண்காட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களான நவராத்திரி கொலு பொம்மைகள், பட்டு, பருத்தி ஆடைகள், செயற்கை ஆபரணங்கள், கைவினைப் பொருட்கள், சணல், காகிதம், பனை ஓலை மற்றும் வாழை நார் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், மரச் சிற்பங்கள், மூலிகைப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்தி 48 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. அறுசுவை மிகுந்த பாரம்பரிய உணவுகளை உண்டு மகிழ்வதற்கென தனி அரங்குகளும் அமைக்கப்பட்டிருந்தன. வார இறுதி நாட்களில் பாரம்பரியம் நிறைந்த சிறப்பான கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.





# பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் காலை மற்றும் மதிய உணவிற்காக பாரம்பரிய முறையில் மசாலாப் பொருட்கள் தயாரிப்பு





திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், வட ஆண்டாப்பட்டு ஊராட்சியில் காவேரி மகளிர் சுய உதவிக் குழு மூலமாக முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவிற்காக பாரம்பரிய முறையில் மசாலாப் பொருட்கள் தயாரிப்பு பணியை, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள் 16.09.2024 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, நம்முடைய வீடுகளுக்கு பயன்படுத்தும் தரத்தில் ரசாயன கலவை இல்லாத சுகாதார முறையில், முதன்மையான தரத்தில் மசாலாப் பொருட்களை தயார் செய்து காலை உணவு திட்டம் மற்றும் மதிய உணவு திட்டத்திற்கு வழங்க வேண்டும் என மகளிர் சுய உதவி குழுவினரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.




# ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் 7வது மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம்

கிராமப்புற இளைஞர்களின் சுய வேலைவாய்ப்பை மேம்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னோடி வங்கிகள் மூலமாக ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களின் 7வது மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் 25.09.2024 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாக கூட்ட அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநில அளவிலான வங்கியாளர் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு. மோகன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் 36 மாவட்ட ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் இயக்குநர்கள், இந்தியன் வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாளர்கள், நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் உள்ளிட்ட வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வங்கிகள் கடன் உதவி அளித்து சுய தொழில் மேற்கொள்ள வழிகாட்ட வேண்டும் எனவும், அனைத்து மாவட்டங்களிலும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையங்களை கட்டிக் முடிக்க வேண்டும் எனவும் வங்கிகளின் ஒருங்கிணைப்பாளர்களை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் வலியுறுத்தினார்.

மேலும், இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, சுய வேலைவாய்ப்பு பயிற்சிக்காக இளைஞர்களை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கப் பணியாளர்களுடன் இணைந்து தேர்வு செய்யுமாறு கேட்டுக் கொண்டதுடன், பணியில் சேர்வது குறித்து 155 330 எனும் அழைப்பு எண் மூலமாகவோ அல்லது 1800 309 8039 எனும் கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவும் தெரிந்து கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் திரு. ஆர். சங்கர், இணை இயக்குநர் திரு. சிவக்குமார், NIRD இயக்குனர் திரு. சத்தீஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவாக, மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன் நன்றி கூறினார்.





# மகளிர் சுய உதவிக் குழுக்களின் உணவு திருவிழா மற்றும் கல்லூரி சந்தை

தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பாக தருமபுரி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 25.09.2024 முதல் 27.09.2024 வரை நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் கல்லூரி சந்தையினை தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கே. சாந்தி, இ.ஆ.ப., அவர்கள் 25.09.2024 அன்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி அ. லலிதா மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவ-மாணவியர் கலந்து கொண்டனர்.






தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், எளம்பலூர் தந்தை ஹேன்ஸ் ரோவர் கலை - அறிவியல் கல்லூரியில் 22.08.2024 முதல் 24.08.2024 வரை நடைபெற்ற கல்லூரி சந்தையினை, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. கிரேஸ் லால்ரிண்டிகி பச்சுவா, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திருமதி. அமுதா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சார்பாக நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களின் மாவட்ட அளவிலான ஊட்டச்சத்து உணவு திருவிழாவினை 27.09.2024 அன்று தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர்.வி. ஷஜீவனா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து, அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த உணவுகளைப் பார்வையிட்டார்.



# அடுக்குமாடி குடியிருப்புகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திடும்

# அபார்ட்மெண்ட் பஜார்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை பெருநகரங்களில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள் மத்தியில் விற்பனை செய்ய ஏதுவாக 25 அடுக்கு மாடி குடியிருப்புகளில் அபார்ட்மெண்ட் பஜார் நடத்தப்படும் என தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்திடும் வகையில் 27.09.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், படூரில் உள்ள ஹிராநந்தானி அடுக்கு மாடி குடியிருப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திடும் அபார்ட்மெண்ட் பஜார் நடைபெற்றது.

27.09.2024 மற்றும் 28.09.2204 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த அபார்ட்மெண்ட் பஜாரில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களைக் கொண்ட 20 அரங்குகளில் நவராத்திரி பண்டிகைக்கு தேவையான கொலு பொம்மைகள், பூஜை பொருட்கள், பரிசு பொருட்கள், பாரம்பரிய அரிசி வகைகள், கைவினைப் பொருட்கள், கைத்தறி துணி வகைகள் போன்ற அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்பட்டன. மேலும் வாடிக்கையாளர்களுக்கான பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.





## தெரிந்து சொல்லுங்கள் –2

1. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு?
2. ஆரம்பத்தில் மகளிர் திட்டம் எந்தத் துறையின் கீழ் செயல்பட்டு வந்தது?
3. ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் மகளிர் திட்டம் எந்த ஆண்டு கொண்டு வரப்பட்டது?
4. சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதியாக வழங்கப்படும் தொகை எவ்வளவு?
5. சமுதாய முதலீட்டு நிதி எத்தனை மாதங்கள் நிறைவடைந்த சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது?

மேற்கண்ட வினாக்களுக்கு சரியான விடைகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பும் நபர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :**

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்**
(மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்),
அன்னை தெரசா மகளிர் வளாகம், முதல் தளம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்**

# 155 330

**LIVELIHOOD HELPLINE NUMBER**

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.



**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**
அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ddugkytn2016@gmail.com

சட்டம் என்ன சொல்கிறது?

# பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் – 2012



பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 என்பது, இந்தியாவில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சட்டமாகும். 18 வயதுக்குக் குறைவான அனைத்துக் குழந்தைகளும் பாலின வித்தியாசமின்றி, இச்சட்டத்தின் வரையறைக்குள் வருவர். ஆண் குழந்தைகள் பாதிக்கப்பட்டாலும், இச்சட்டம் தலையீடு செய்யும். பாலியல் தாக்குதல்/வன்முறை, பாலியல் துன்புறுத்தல்/சீண்டல், ஆபாசப் படமெடுக்கக் குழந்தைகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றைக் குற்றங்களாக இச்சட்டம் முன்வைக்கிறது. 30 நாட்களுக்குள் குழந்தையின் சாட்சியம் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு வருடத்துக்குள் வழக்கு முடிய வேண்டும். சாதாரண சிறை தண்டனையிலிருந்து, கடுங்காவல், ஆயுள் தண்டனை வரை கொடுக்கலாம் என இச்சட்டம் குறிப்பிடுகிறது.

இதற்காக சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்பட வேண்டும். வழக்கின் துவக்கத்திலிருந்து இறுதி வரை - புகார் கொடுப்பது, முதல் தகவல் அறிக்கை பதிவு, விசாரணை, வாக்கு மூலம் பதிவு, வழக்கு நடப்பது போன்ற அனைத்திலும் - பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலன் மையமாக இருக்க வேண்டும். அதுதான் மிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டிய அம்சம் என்று சட்டம் கூறுகிறது. உதாரணமாக, “பாதிக்கப்பட்ட சிறுமி/சிறுவரின் சாட்சியம் அவர்களின் வீட்டிலோ அல்லது அவர்கள் விரும்புகிற இடத்திலோ தான் பதிவு செய்யப்பட வேண்டும். துணை ஆய்வாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பொறுப்பில் உள்ள பெண் காவல் அதிகாரி தான் பதிவு செய்ய வேண்டும். அப்போது காவலர் சீருடையில் அந்த அதிகாரி இருக்கக் கூடாது.” இரவு நேரத்தில், அவர்களைக் காவல் நிலையத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது. குழந்தை எதை எப்படி சொல்லுகிறதோ, அதை அப்படியே அந்த வார்த்தைகளில் பதிவு செய்ய வேண்டும். மாற்றுத் திறனாளி என்றால், குழந்தை பேசுவதைப் புரிந்து கொண்டு எடுத்துச் சொல்ல சைகை மொழி பேசுபவர் அல்லது குழந்தையின் பெற்றோர், உறவினரின் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்/உற்றோரின் முன்னிலையில் மருத்துவப் பரிசோதனை செய்யப்பட வேண்டும். பெண் குழந்தை என்றால், பெண் மருத்துவர் செய்ய வேண்டும். அவசர மருத்துவ சிகிச்சை அளிக்க நேர்கிறபோது, மருத்துவர்கள் காவல் துறை அல்லது நீதி துறையின் உத்தரவைக் கோரக் கூடாது. வழக்கு நடக்கும்போது, அடிக்கடி குழந்தை ஆசுவாசப்படுத்திக்கொள்ள நேரம் ஒதுக்க வேண்டும் .விசாரணையோ, வழக்கோ, வாக்குமூலமோ பாதிக்கப்பட்ட சிறுமி/சிறுவரைத் திரும்ப திரும்ப நடந்ததைச் சொல்ல வற்புறுத்தக் கூடாது. குறுக்கு விசாரணை என்ற பெயரில் சங்கடப்படுத்தும் கேள்விகள் அல்லது நடத்தையை சந்தேகிக்கும் கேள்விகளைக் கேட்கக்கூடாது.

குற்றம் இழைத்தவர்கள் மட்டுமல்ல, குற்றத்தை செய்யும் நோக்கத்துடன் அதற்காக முயற்சித்தவர்களும் குற்றவாளிகள்தான் எனக் குறிப்பிட்டு, குற்றத்துக்கு என்ன தண்டனையோ, அதில் பாதியை குற்றம் செய்யும் நோக்கத்துடன் முயற்சிப்பவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று இச்சட்டம் கூறுகிறது. மற்றொரு முக்கிய பிரிவு, பாலியல் வன்கொடுமை குற்றத்தைப் பொறுத்தமட்டில், குற்றம் நடந்தது என்று மனுதாரர் தரப்பு நிரூபிக்க வேண்டியதில்லை. குற்றவாளி தான், தான் குற்றம் செய்யவில்லை என்று நிரூபிக்க வேண்டும் என்று வலியுறுத்துவதுடன், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர், சிறுமியர் பெயரையும், அடையாளத்தையும், சிறப்பு நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் வெளியிடக் கூடாது என்றும் அழுத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது.

சிறப்பு நீதிமன்றம் தாமாகவோ அல்லது பாதிக்கப்பட்டோரின் மனுவின் அடிப்படையிலோ தேவையைப் பொறுத்து இடைக்கால நிவாரணம் வழங்கலாம். குற்றவாளி தண்டனை பெற்றாலும், விடுவிக்கப்பட்டாலும், குற்றவாளியை அடையாளம் காண முடியாவிட்டாலும், தலைமறைவாகப் போய் விட்டாலும் கூட இழப்பீடு வழங்கலாம். உடல் காயம், மன உளைச்சல், மருத்துவச் செலவு, குடும்பத்தின் பொருளாதார நிலை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு இழப்பீடு வழங்க வேண்டும். மன/உடல் நிலை சரியில்லாமல் அல்லது விசாரணை, வழக்குக்குச் செல்வதற்காகப் பள்ளி செல்ல முடியாத நிலை ஏற்பட்டால் அதையும் கணக்கில் எடுக்க வேண்டும். எச்.ஐ.வி. தாக்குதல், கர்ப்பமாகுதல், ஊனமடைதல் போன்றவற்றையும் கவனத்தில் கொண்டு இழப்பீடு வழங்க வேண்டும். மாநில அரசே நிவாரணத் தொகையை வழங்க வேண்டும். நீதிமன்ற உத்தரவு பெற்று 30 நாட்களுக்குள் இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

# வாழ்வாதார வளர்ச்சி பெற்ற சுய உதவிக் குழுக்கள்

கடலூர் மாவட்டம், பண்ருட்டி நகராட்சி, 27-வது வார்டுக்குட்பட்ட தனலட்சுமி நகரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் 2019ஆம் ஆண்டு லட்சுமிபதி நகர்ப்புரப் பகுதி அளவிலான கூட்டமைப்பு (ALF) உருவாக்கப்பட்டது. இக்கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இணைந்து செயல்படும் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழு (மளிகை வியாபாரம்), ரோஜா மகளிர் சுய உதவிக் குழு (துணி வியாபாரம்), புத்தர் தாயகம் மகளிர் சுய உதவிக் குழு (சாலையோர வியாபாரம்), தமிழிசை மகளிர் சுய உதவிக் குழு (பால் வியாபாரம்), ஸ்ரீ வாராகியம்மன் மகளிர் சுய உதவிக் குழு (சிறு வியாபாரம்), அஷ்டலட்சுமி மகளிர் சுய உதவிக் குழு (இனிப்பு, கார தின்பண்டங்கள் தயாரித்தல்), ஸ்ரீ நாச்சியம்மன் மகளிர் சுய உதவிக் குழு (முந்திரி தரம் பிரித்து விற்பனை செய்தல்), ஸ்ரீ சொர்ண லட்சுமி மகளிர் சுய உதவிக் குழு (ஊதுவர்த்தி, சாம்பிராணி உற்பத்தி), பாரிஜாதம் மகளிர் சுய உதவிக் குழு (தையல் தொழில்) ஆகிய தொழில்களை மேற்கண்டு வருவாய் ஈட்டி வருகின்றன.

இந்த சுய உதவிக்குழுக்கள் செய்கின்ற தொழில்களை அடிப்படையாக கொண்டு லட்சுமிபதி நகர்ப்புரப் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ஒரு கோடி ரூபாய் 19.01.2024 அன்று பாரத ஸ்டேட் வங்கியால் வழங்கப்பட்டது. இந்தத் தொகையினை கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள 10 சுய உதவிக் குழுக்களுக்கும் தலா ரூ.10.00 இலட்சம் வீதம் தொழில் மேம்பாட்டிற்காக பிரித்து வழங்கப்பட்டது. இந்தத் தொகையினை பெற்ற சுய உதவிக் குழுக்கள் தங்களின் தொழில் நடவடிக்கைகளை மேலும் பெருக்கி தங்கள் வருவாயினை அதிகரித்துள்ளனர்.

இந்த மாபெரும் கடன் உதவி மூலம் லட்சுமிபதி நகர்ப்புரப் பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயல்பட்டு வரும் 10 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக உள்ள 120 குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்துள்ளது. தங்களின் வாழ்வாதாரம் வளர்ச்சி பெறுவதற்கு உதவியாக இருந்து வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு லட்சுமிபதி நகர்ப்புரப் பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயல்பட்டு வரும் 10 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களும் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.





தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

வெற்றிக் கதைகள்

# நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் வசிக்கும் 12 நபர்கள் ஒன்றிணைந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அலமேலு மங்கை மகளிர் சுய உதவிக் குழுவினை அமைத்தனர். இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இப்பகுதியில் அதிகமாக விளையக்கூடிய மாம்பழம் மற்றும் செவ்வாழை போன்றவற்றை விற்பனை செய்து வருவாய் பெற்று வந்தனர். இதில் போதுமான அளவு வருவாய் கிடைக்காத காரணத்தினால், தங்களின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதிக வருமானம் ஈட்டுவதற்கான தொழிலில் ஈடுபடலாம் என்று இருந்த போது காமாட்சிபுரத்தில் நடைபெற்ற மாங்காய் பவுடர், வாழைக்காய் பவுடர் தயாரிப்பது குறித்த பயிற்சியில் பங்கேற்று சிறந்த முறையில் பயிற்சி பெற்றனர்.

பயிற்சிக்குப் பின்னர், தங்களுக்கு கிடைத்த சுழல் நிதி மானியம் ரூ.10,000/-த்தை மூலதனமாகக் கொண்டு, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உள்ளவர்களின் உடல்நலத்தை கருத்தில் கொண்டு சத்தான உணவுகளையும், மாங்காய் பொடி, மேங்கோ பார், செவ்வாழை பவுடர், தேன் நெல்லி, நெல்லிக்காய் ஜூஸ், மாம்பழ ஜூஸ் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்வதுடன், வாழை மட்டைகளை வீணாக்காமல் கூடைகளை முனைந்து விற்பனை செய்து வருவாய் பெற்று வந்தனர்.

தங்களின் தொழிலை மேலும் விரிவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ரூ.2,85,000/- வங்கிக் கடன் பெற்று, அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, இயந்திரங்கள் மூலம் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்து வந்ததுடன், வங்கிக் கடனையும் முறையாகத் திரும்பச் செலுத்தி விட்டனர்.

தொடர்ந்து, இரண்டாவது முறையாக ரூ.6,00,000/- வங்கிக் கடனாகப் பெற்று, 3 வகையான காய்கறி நறுக்கும் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம், ஹல்வா தயாரிக்கும் இயந்திரம் ஆகியவற்றை கொள்முதல் செய்து, அதிக அளவில் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் அலமேலு மங்கை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மாதந்தோறும் நிறைவான அளவில் வருவாய் பெற்று, வாழ்வாதார வளர்ச்சி அடைந்து வருகின்றனர்.

சொந்தமாக தொழில் செய்ய உறுதுணையாக இருந்து வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர் அலமேலு மங்கை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள்.





# குறுகிய கால பயிற்சி...! நிறைவான மகிழ்ச்சி...!!

என் பெயர் வினிதா முத்து, மதுரை மாவட்டம், ராஜாக்கூர் கிராமம் எனது சொந்த ஊர். எனது தந்தை திரு. முத்துகிருஷ்ணனும், தாயார் தனலட்சுமியும் விவசாய கூலியாக வேலை செய்து வருகிறார்கள். வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள நாங்கள் குடிசை வீட்டில் வசித்து வருகிறோம். நான் எட்டாம் வகுப்பு படிக்கும் வரை எங்கள் வீட்டில் மின்சார வசதி கூட கிடையாது. நான் பனிரெண்டாம் வகுப்பு வரை அரசு பள்ளியில் படித்து வந்தேன். குடும்ப சூழ்நிலை மற்றும் வறுமை காரணமாக என்னால் மேற்கொண்டு படிக்க இயலவில்லை. குடும்ப சூழ்நிலையால் எனது படிப்பை நிறுத்திய பிறகு, எனது பெற்றோருடன் சேர்ந்து நானும் எங்கள் கிராமத்தின் அருகில் உள்ள கிரானைட் தொழிற்சாலைக்கு தினக் கூலி வேலைக்கு சென்று வந்தேன். எனக்கு தொடர்ந்து படிக்க வேண்டும், படித்து முடித்தபின் நல்ல வேலைக்கு சென்று சம்பாதித்து என் பெற்றோரை நன்கு பார்த்து கொள்ள வேண்டும் என்று ஆசை. ஆனால் அந்த ஆசை நிறைவேறவில்லை.

அந்த சூழ்நிலையில், எனது தாயார் உறுப்பினராக உள்ள மகளிர் சுய உதவிக் குழுவின் சிறப்பு கூட்டம் ஒன்று நடந்தது, அதில் தீனதயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் பயிற்சித் (DDU-GKY) திட்டத்தை பற்றி அதன் அலுவலர்கள் விளக்கினார்கள். எனது தாயார் என்னை இத்திட்டத்தின் பயிற்சியில் சேருமாறு அறிவுறுத்தினார். அதன்படி மதுரையில் உள்ள "கல்வி அறக்கட்டளை" பயிற்சி மையத்தில், ``Accounts Assistant Using Tally" எனும் 3 மாத கால பயிற்சியில் சேர்ந்தேன். மூன்று மாத பயிற்சியில், அடிப்படை கணினிப் பயிற்சி, ஆங்கிலம் மற்றும் கணக்கியல், Tally ஆகியவற்றைக் கற்றுக் கொண்டேன். மேலும் இத்திட்டத்தில் எங்களுக்கு சீருடை, புத்தகங்கள், Tablet கணினி, பேருந்து பயணப்படி மற்றும் உணவு, தங்குமிட வசதி ஆகியவற்றை எவ்விதக் கட்டணமும் இல்லாமல் அளித்து, பயிற்சி கொடுத்தனர்.

பயிற்சியின் முடிவில் மதுரையில் உள்ள பிரபல துணிக்கடை நிறுவனத்தில் உதவி கணக்காளராக பணிக்கு சேர்ந்தேன். எனக்கு மாதம் ரூ.8,000/- ஆரம்ப சம்பளமாக வழங்கப்பட்டது. நான் அதே நிறுவனத்தில் ஒரு ஆண்டுகளுக்கும் மேலாக வேலை செய்து, தற்பொழுது ரூ.13,500/- மாத சம்பளமாகப் பெறுகிறேன்.

என் சம்பளத்தின் கூடுதல் வருவாய் எனக்கும் எனது குடும்பத்திற்கும் பேருதவியாக உள்ளது. நான் எனது பெற்றோரை நன்கு கவனித்து கொள்கிறேன். வேலையில் சேர்ந்தது முதல் இரண்டு மாதங்களுக்கு நிறுவனத்தில் பெற்ற சம்பளத்துடன் DDU-GKY திட்டத்தின் மூலம் எனக்கு ஊக்கத் தொகையாக ரூ.1,000/- வீதம் இரண்டு மாதத்திற்கு வழங்கினர்.

மேலும் தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள மகளிர் இலவச பேருந்து சேவை திட்டத்தால், எனது சம்பளத்தில் மாதம் ரூ.3,000/- வரை கூடுதலாக மீதமாகிறது. இந்தத் திறன் பயிற்சித் திட்டத்தை எங்களுக்கு அளித்த தமிழ்நாடு அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மேலும் பயிற்சி அளித்த கல்வி அறக்கட்டளை நிறுவனத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறேன்.

- வினிதா முத்து



# வணிகம் வளர்க...

## மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



### டீ, இன்ஸ்டண்ட் காபி மற்றும் பில்டர் காபி

பசுமை சிறகுகள் மகளிர் சுய உதவிக் குழு,
நீலகிரி மாவட்டம்
கைபேசி : 96005 15588



### கைத்தறி மற்றும் விசைத்தறியில் தயாரிக்கப்படும் துண்டுகள்

சக்தி மகளிர் சுய உதவிக் குழு
சேலம் மாவட்டம்
கைபேசி : 98422 40153



### சிறுதானிய தின்பண்டங்கள்

பூங்குழலி மகளிர் சுய உதவிக் குழு
கோயம்புத்தூர் மாவட்டம்
கைபேசி : 88709 41010



### தினை மற்றும் சாமை பிஸ்கட்டுகள்

அமுதம் மகளிர் சுய உதவிக் குழு
தர்மபுரி மாவட்டம்
கைபேசி : 97864 62036



### முந்திரி, உலர் திராட்சை, பாதாம், பிஸ்தா

விருமாண்டம்பாளையம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு,
ஊத்துக்குளி, திருப்பூர் மாவட்டம்
கைபேசி : 77081 11150

சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விவரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

சந்தாதாரர்களே நேரடியாக முற்றம் https://mutram.org.in/Login.aspx என்ற இணையதள முகவரி அல்லது https://play.google.com/store/apps/details?id=com.isky.mutram_magazine என்ற கைபேசி செயலியில் தங்களது முகவரியினைப் பூர்த்தி செய்தல் மற்றும் பணப்பரிமாற்றம் போன்ற பணிகளை செய்து கொள்ளலாம்.


விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

# வளர்ச்சிக்கு உறுதுணையான வாழ்வாதார இயக்கம்

புதுக்கோட்டை மாவட்டம், ஆதனக்கோட்டை ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் ஆதனக்கோட்டை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 25 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக இணைந்து செயல்பட்டு வருகின்றன.

ஆதனக்கோட்டை மடத்துக்கடை பகுதியிலும், திருவள்ளுவர் நகர் பகுதியிலும் சில குடும்பத்தினர் முந்திரி விற்பனைத் தொழிலை பரம்பரை தொழிலாக செய்து வருவதுடன், தீபம், செவ்வந்திப் பூ, வெற்றி மலர், புதுக்கவிதை, அரும்பு, வேலுநாச்சியார் மற்றும் சிவப்பு ரோஜா ஆகிய சுய உதவிக் குழுக்கள் மூலமும் முந்திரி தொழில் செய்து வருகின்றனர்.

ஆதனக்கோட்டை, மடத்துக்கடை பகுதியில் செயல்படும் சிவப்பு ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் குழுவின் செயல்பாடுகள் குறித்து கூறும்போது, “எங்கள் சிவப்பு ரோஜா குழுவிற்கு கூட்டமைப்பு ஆதார நிதியாக ரூ.15000/- மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் தொழிற்கடனும் வழங்கி, எங்களின் தொழிலை சிறப்பாக செய்திட உறுதுணையாக இருக்கிறது.

எங்களது குழுவில் இணைந்துள்ள 13 உறுப்பினர்களும், தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கத்தின் மூலம் கணக்கெடுப்புச் செய்யப்பட்ட மக்கள் நிலை ஆய்வு பட்டியலில் ஏழை, மிகவும் ஏழை என்ற வரிசையில் இடம் பெற்றுள்ளனர். எனவே நாங்கள் வறுமையில் உள்ளவர்கள் என்பதாலும், வேறு தொழில் தெரியாது என்பதாலும், நாங்கள் குழுவாக இணைந்து முந்திரி தொழிலை செய்து வருகிறோம்.

எங்களது குழுவிற்கு எங்களது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து வழங்கப்பட்ட ஆதார நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதி ஆகியவற்றை முதலீடாகக் கொண்டு, பச்சை முந்திரிக் கொட்டைகளை கொள்முதல் செய்து, உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து அவற்றைப் பதப்படுத்தி விற்பனை செய்து வருவாய் பெற்று வருகிறோம். வறுமையிலுள்ள எங்களுக்கு இத்தொழில் மூலம் நாளொன்றுக்கு ரூ.200/- முதல் ரூ.300/- வரை வருமானம் கிடைப்பதுடன், முந்திரி வறுக்க, உடைக்க, உறிக்க என திறமைக்கேற்ற கூலியும் கிடைக்கிறது. இந்த தொழில் மூலம் எங்களுக்கு கிடைக்கும் வருவாயில் எங்களது குழுவில் சேமிப்பு மற்றும் வங்கிக் கடன் ஆகியவற்றையும் செலுத்தி வருகிறோம்.

எங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என சிகப்பு ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.





வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

வெற்றிக் கதைகள்

## விருதுநகர் மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின்
# வளர்ச்சிப் பணிகள் கள ஆய்வு செய்யப்பட்டன!

‘வாழ்ந்து காட்டுவோம் திட்டம்’ என அழைக்கப்படும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் (TNRTP) திட்டத்தின் விருதுநகர் பயனாளர்களின் தொழில் நிறுவனங்களை TNRTP திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் ஆகியோர் 09.09.2024 அன்று கள ஆய்வு செய்து, தொழில் உதவிகளையும் தொழில் மேம்பாட்டு ஆலோசனைகளையும் வழங்கினர்.

ஆய்வின் முதற்கட்டமாக இனாம் ரெட்டியப்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி, NEFF வட்டி விகிதம் குறித்து கேட்டறிந்து, இக்கடனுக்கு 1 ரூபாய் வட்டி வசூலிக்கவும், பயனாளிகள் விவரத்தினை போர்ட்டலில் பதிவேற்றம் செய்திடவும் அறிவுறுத்தினர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து, விருதுநகர் வட்டாரத்திலுள்ள பட்டம்புதூர் பகுதியளவிலான தையல் தொழில் குழுவை பார்வையிட்டனர். இத்தையல் தொழிற்குழுவில் 15 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்தத் தொழில் குழு 11 தையல் இயந்திரங்கள், 1 Overlog Machine, 2 Ordinary Machines ஆகியவற்றைக் கொண்டு இயங்கி வருகிறது. இக்குழுவினர் தாம்பூலப்பை மற்றும் கட்டைப்பை ஆகியவற்றைத் தைத்து வருகின்றனர். தற்போது ராம்ராஜ் காட்டன் நிறுவனத்திடம் ஆர்டர் எடுத்து, ஒரு பைக்கு ரூ.3.50/- வீதம் ஒரு நாளைக்கு மொத்தம் 500 பைகள் தைத்து வருகின்றனர். மேற்கண்ட விபரங்களை அதிகாரிகள் கேட்டறிந்ததுடன், தொழில் குழுவை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லவும், வணிகத்தை விரிவாக்கம் செய்யவும் அறிவுரைகளை வழங்கினர்.

பின்னர் விருதரசி உழவர் உற்பத்தியாளர் நிறுவன அலுவலகத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தினர் மதிப்புக் கூட்டுப் பொருளாக உற்பத்தி செய்யப்பட்ட நிலக்கடலை, கடலை எண்ணெய் ஆகியவற்றை விற்பனை செய்து வருகின்றனர். இந்த நிறுவனத்தை ஆய்வு செய்த ஆய்வுக் குழுவினர், எண்ணெய் வடிகட்டும் இயந்திரம் மூலம் எண்ணெயை வடிகட்டி அதன் தரத்தை மேம்படுத்திடவும், எண்ணெயை டின்னிலும், பாக்கெட்டிலும் அடைத்து விற்கவும் அறிவுறுத்தினர். Decodicator Machine ஐ வாடகைக்கு விடுவதன் மூலம் இலாபம் பெறுதல், மதிப்புக் கூட்டு ஆலைகளை தூய்மையாக பராமரித்தல், தூசி சேராமல் பாதுகாப்பாக வைத்திருத்தல் போன்ற அறிவுரைகளையும் வழங்கி, நிறுவனத்தில் பங்குதாரர்களாக உள்ள 1624 பேரும் வணிகத்தில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

தொடர்ந்து வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட அலுவலகத்தை ஆய்வு செய்து, செயல் அலுவலர்கள், வட்டார அணித் தலைவர்கள், திட்ட செயல்பாட்டாளர்கள் மற்றும் தமிழ்நாடு வாழ்வாதார இயக்க அலுவலர்கள் ஆகியோருடன் கலந்துரையாடினர். இதில் திட்டத்தின் மூலம் பயனாளர்களுக்கு வழங்கப்பட்ட கடனுதவிகள், திருப்பப் பெற்றவை, தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிகளைக் கேட்டறிந்ததுடன் நிலுவையில் உள்ள பணிகளை முடிக்கவும், பணியாளர்களுக்கு கூடுதல் ஊக்கத் தொகை வழங்கவுள்ளதாகவும் ஊக்கப்படுத்தினர்.





வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

வெற்றிக் கதைகள்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வளர்ச்சிப் பணிகளை

# சிக்கிம் மாநில 'INSPIRES' அணியினர் பார்வையிட்டு விவரங்களை சேகரித்தனர்

தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளில் தொழில் வளங்களை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் என்கிற தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP), தொழில் முனைவோர்களுக்கு நிதியுதவிகள், தொழில்நுட்ப அறிவு - இயந்திர உதவிகள், உற்பத்திப் பொருட்களை மதிப்புக் கூட்டும் திறனறிவு, வணிக அடையாளம் செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை நேரடியாக விற்பதற்கான சந்தையறிவு, சந்தை இணைப்புகள் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திறன்கள் ஆகியவற்றை வழங்கி மேம்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு அரசு மற்றும் உலக வங்கியின் நிதியுதவியில் செயல்பட்டு வரும் இத்திட்டத்தின் ஆதரவில் ஊரகப் பகுதிகளில் சுய உதவிக் குழு / சுய உதவிக் குழு குடும்பத்தார் நடத்தும் தொழில் நிறுவனங்கள், மகளிர் நடத்தும் தொழில் நிறுவனங்கள், மாற்றுத்திறனாளிகள் நடத்தும் தொழில் நிறுவனங்கள் ஆகியவை மேம்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் பயனாளர்களாக மகளிர் சுய உதவிக் குழுவினர், பட்டியலினத்தோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் பயனடைந்து வருகின்றனர். இதுவரை இத்திட்டத்தின் வழியாக 5,21,966 பயனாளர்கள் பயனடைந்துள்ளனர், இவர்களின் வழியாக வேளாண் மற்றும் வேளாண் சாராத் தொழில்களும், புதுமைத் தொழில்களும் புதிய செழிப்பில் வளமடைந்துள்ளன.

தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் இத்திட்டத்தின் செயல்பாடுகளைப் பார்வையிடவும், செயல்பாட்டின் விவரங்களை சேகரித்திடவும் சிக்கிம் மாநிலத்திலிருந்து 'சிக்கிம் மாநில INSPIRES' அணியினர் வருகைப் புரிந்திருந்தனர். அதன் அடிப்படையில் INSPIRES அணியினர் TNRTP திட்ட அலுவலர்களுடன், திட்டப் பயனாளர்களின் தொழில் நிறுவனங்களை 4 நாட்கள் பார்வையிட்டு தொழில் நடவடிக்கை விவரங்களை சேகரித்தனர்.

இந்நிகழ்ச்சியின் முதல் நாள் TNRTP திட்டத்தின் மாநில திட்ட மேலாண்மை அலகின் (SPMU) முன்னெடுப்புகள் மற்றும் TN-RISE திட்ட செயல்பாடுகள் குறித்த விவரங்களை அறிந்து கொண்டனர். இரண்டு மற்றும் மூன்றாவது நாட்களில் விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை திட்டப் பகுதிகளைப் பார்வையிட்டு விவரங்களை சேகரித்தனர். நான்காம் நாள் அனைத்துப் பகுதிகளிலும் பார்வையிட்டு சேகரித்த விவரங்களை ஒரு 'ஊரகப் பகுதிகளின் வெற்றித் திட்டமாக' மதிப்பீடு செய்து, தங்கள் சிக்கிம் மாநிலத்தில் செயல்படுத்துவதற்காக முன்னோடி திட்டமாகப் பதிவு செய்து கொண்டனர். இந்த பார்வையிடல் நிகழ்ச்சியின்போது TNRTP அலுவலர்களும் உடனிருந்தனர்.













# பால் உற்பத்தியில் வளமும், உற்பத்தியாளர் நிறுவனத்தின் பலமும் பெற்றுள்ளோம்!

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டாரம், ஜல்லிபட்டி ஊராட்சியில் ஏற்கனவே பால் மாடு வளர்த்து வந்த 40 உறுப்பினர்களைக் கொண்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தினர் திட்ட வழிகாட்டுதலின்படி பால் மாடு வளர்ப்போர் உற்பத்தியாளர் குழு என்ற பெயரில் குழு துவங்கி கடந்த 07.01.2022 அன்று முதல் லட்சுமிபுரம் வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கி செயல்படுத்தி வந்தோம்.

இந்நிலையில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் தொடக்க நிதியாக கடந்த 10.05.2022 அன்று ரூ. 75,000/- வழங்கப்பட்டது. அதன் மூலம் கால்நடைத் தீவனங்கள் பெற்று பால்மாடு வளர்ப்போர் உற்பத்தியாளர் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. கால்நடைத் தீவனங்களை பெற்றவர்கள் தீவனம் பெற்றதற்கான தொகையினை செலுத்தி வந்தனர். அதனைத் தொடர்ந்து அனைவரும் ஒன்று கூடி முடிவெடுத்து ‘கால்நடை தீவனக்கடை’ திறப்பது என முடிவெடுத்து கால்நடை தீவனக்கடை திறக்கப்பட்டது.

மேலும், குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு மொத்தம் 60 உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது தீவனக் கடையில் குழு உறுப்பினர்கள் மட்டுமில்லாமல் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் அமைந்து இருப்பது மிகவும் பயனுள்ளதாக அனைவரும் கூறி வருகின்றனர். மேலும் திட்ட பணியாளர்களின் வழிகாட்டுதலின்படி கால்நடை மருத்துவர்களை அணுகி கால்நடைகளுக்கான மருத்துவ முகாம்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றது.

இதுதவிர தேனி மாவட்டத்தில் உள்ள உழவர் பயற்சி மையத்தில் கால் நடை குறித்து எமது குழுவின் சார்பில் 2 உறுப்பினர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். கால்நடைத் தீவனக் கடையின் மூலம் தினமும் குழு உறுப்பினர்கள் மற்றும் பிற விவசாயிகளுக்கு தீவனங்களை விற்பனைச் செய்வதன் மூலம் ரூ. 3,45000 வரையிலான வரவு செலவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த செயல்பாடுகளுடன் எங்கள் உற்பத்தியாளர் குழு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் இணைந்து செயல்பட்டு வருகிறது. எங்கள் குழுவில் உள்ள 20 உறுப்பினர்கள் தலா ரூ.1000/- செலுத்தி பங்குதாரர் சான்றை பெற்றுள்ளனர். திட்டப் பணியாளர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் பிற துறைகளின் உதவிகள் மூலம் எங்கள் பால் மாடு வளர்ப்போர் உற்பத்தியாளர் குழு மிக சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

**– பால் மாடு வளர்ப்போர் உற்பத்தியாளர் குழு**







# பெண்களை அதிகம் தாக்கும் இரத்த சோகை

நம்ரத்தத்தில் இருக்கும் சிவப்பு அணுக்களில் ஏற்படும் குறைபாடுகளையே ரத்த சோகை (Anemia) என்கிறோம். இன்னும் கொஞ்சம் விளக்கமாக சொன்னால், இந்த சிவப்பு அணுக்களில் ஹீமோகுளோபின் என்ற நிறமிகள் இருக்கின்றன. நம் உடலின் செயல்பாட்டுக்குத் தேவையான ஆக்சிஜனை திசுக்களுக்கு எடுத்துச் செல்வது இந்த ஹீமோகுளோபின்கள்தான். சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை குறைந்து, அதனால் ஹீமோகுளோபினின் செயல்பாடும் குறைந்து, அதனால் ஆக்சிஜன் எடுத்துச் செல்லப்படுவதும் தடைபடும் நிலையையே ரத்த சோகை என்கிறோம்.

வழக்கமாக ஹீமோகுளோபின் அளவு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என மூன்று தரப்புக்கும் சிறிது வித்தியாசப்படும். ஆண்களுக்கு சராசரியாக 14.5 முதல் 15.5 gm/dl, பெண்களுக்கு 13.5 முதல் 14.5 gm/dl இருக்க வேண்டும், குழந்தைகளுக்கு 16 முதல் 17 gm/dl என கொஞ்சம் அதிகமாக இருக்கும். (ஒரு லிட்டர் ரத்தத்தில் 10ல் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டு, அதற்குள் எத்தனை கிராம் ஹீமோகுளோபின்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கிடுவார்கள். அதனால்தான் 10ல் ஒன்று என்ற அர்த்தத்தில் Grams per deci litre என்று கணக்கிடுகிறார்கள்.) இந்த ஹீமோகுளோபின் அளவு குறைவதை வைத்து ரத்தசோகை எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம். ஹீமோகுளோபின் 10 முதல் 11 கிராம் இருந்தால் அது லேசான ரத்தசோகை, 9 முதல் 10 கிராமாக இருந்தால் அது மிதமான ரத்தசோகை, 8 கிராமுக்குக் கீழ் இருந்தால் அது தீவிர ரத்தசோகை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

விபத்து, அறுவை சிகிச்சை, புற்றுநோய் போன்றவற்றால் உண்டாகும் ரத்த இழப்புகள், இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம், பி12 போன்ற சத்துகள் கிடைக்காமல் போவது, பரம்பரை குறைபாடு, என்சைம்களில் ஏற்படும் கோளாறு, சிவப்பு அணுவின் அளவு குறைவது அல்லது வடிவம் மாறுவது, மலேரியா காய்ச்சல், ரத்தம் தானம் பெறும்போது ரத்த வகை மாறிப்போவது போன்ற காரணங்களால் ரத்த சோகை உருவாகலாம்.

இரும்புச்சத்து குறைபாடு காரணமாகவே பெரும்பாலானவர்கள் ரத்தசோகைக்கு ஆளாகிறார்கள். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லாத் தரப்பினருக்கும் ரத்தசோகை ஏற்படும் என்றாலும், பெண்கள்தான் இதில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

பருவம் அடைவது, மாதவிலக்கு, பிரசவம் போன்றவற்றால் பெண்கள் இயல்பாகவே அதிக ரத்த இழப்பை சந்திக்கிறார்கள். தாய்ப்பால் கொடுக்கிற பெண்களுக்கு தேவைக்கேற்ற இரும்புச்சத்து கிடைக்காதபோதும் ரத்தசோகை ஏற்படுகிறது. இதனால் குழந்தைக்கும் போதுமான இரும்புச்சத்து கிடைக்காமல் போகும். அதனால், பெண்கள் கவனமாகத் தங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். குடும்பத்தினரும் இந்த விஷயத்தில் பெண் குழந்தைகளின் மேல் கூடுதல் அக்கறை காட்டுவது நல்லது.

சோர்வு, தூக்கம் வருவது போன்ற உணர்வு, பசியின்மை, எந்த செயலிலும் ஆர்வத்தோடு ஈடுபட முடியாதது, மூச்சு வாங்குவது, நாக்கு, கண்களின் கீழ் பகுதி, மேலண்ணம் போன்ற இடங்கள் சிவந்த நிறத்தை இழந்து வெளுப்பாக மாறி விடுவது, விரல் நகம் மேடாக இல்லாமல் தட்டையாக காட்சியளிப்பது போன்ற அறிகுறிகள் ரத்தசோகை இருப்பவர்களிடம் வெளிப்படையாகத் தெரியும். ரத்தசோகையின் இந்த அறிகுறிகள் தெரிந்தால் ரத்தப் பரிசோதனை நிலையத்தில் சென்று பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம். காலையில்தான் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்பதோ, சாப்பிடுவதற்கு முன்புதான் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்பதோ கிடையாது.

எல்லாவற்றுக்கும் மேலாக சரிவிகித உணவு சாப்பிடுகிறவர்களுக்கு ரத்தசோகை வருவது இல்லை. கீரை வகைகள், முட்டை, பால், இறைச்சி, பேரீச்சம்பழம் போன்றவற்றை உணவில் தவறாமல் சேர்த்துக் கொள்வதன் மூலம் ரத்தசோகை ஏற்படாமல் தடுக்க முடியும். குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஜீரண சக்தி குறையும்போது மாத்திரை, ஊசி வழியாகவும் அந்த குறைபாட்டை சமன்படுத்த முடியும்.

# பாசிப் பருப்பு பூரி

பாசிப்பருப்பு மற்றும் மசாலாக்கள் சேர்த்து செய்யும் சத்து நிறைந்த இந்த பூரியை சிறுவர் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் காலை உணவாகும்.

### தேவையானப் பொருட்கள்

பாசிப்பருப்பு-அரை கப், கோதுமை மாவு-2 கப், ரவை-2 டேபிள் ஸ்பூன், மஞ்சள் தூள் -கால் ஸ்பூன், மிளகாய்த் தூள்-ஒரு ஸ்பூன், சீரகத்தூள்-அரை ஸ்பூன், கரம் மசாலா-அரை ஸ்பூன், வெந்தயம்-அரை ஸ்பூன், உப்பு-தேவையான அளவு, எண்ணெய்- பூரி பொரித்து எடுக்கத் தேவையான அளவு



### செய்முறை

பாசிப்பருப்பை 2 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து, பின்னர் அதை நன்றாக அலசி, தண்ணீரை வடித்து விட்டு, மிக்ஸி ஜாரில் போட்டு கொஞ்சம் தண்ணீர் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பெரிய பாத்திரத்தில் கோதுமை மாவு, அரைத்த பாசிப்பருப்பு, ரவை, மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், சீரகத்தூள், கரம் மசாலா, வெந்தயம் ஆகியவற்றை கலந்து போதிய அளவு உப்பு, தண்ணீர் மற்றும் எண்ணெய் சேர்த்து சப்பாத்தி மாவு பதத்துக்கு பிசைந்து கொள்ள வேண்டும்.

மசாலாப் பொருட்கள் அனைத்தும் மாவின் அனைத்து புறங்களிலும் படும் அளவுக்கு நன்றாக கலந்து மாவை பிசைய வேண்டும். கடைசியாக சிறிது எண்ணெய் சேர்த்து மாவினை மூடி அரை மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

பின்னர் சிறு உருண்டைகளாக உருட்டி, சப்பாத்தி கல்லில் வைத்து, கொஞ்சம் மொத்தமாக தேய்த்துக் கொள்ள வேண்டும். அடுப்பில் வாணலியை வைத்து, எண்ணெயை ஊற்றி எண்ணை சூடானதும் தேய்த்து வைத்த மாவைப் போட்டு பூரிகளாக பொரித்து இருபுறமும் நன்றாக வெந்தவுடன், அதை எண்ணெயில் இருந்து வடித்து எடுத்துக் கொள்ள வேண்டும். சுவையான இந்த பாசிப்பருப்பு பூரியை பன்னீர், காய்கறி மசாலா அல்லது மட்டன், சிக்கன் என அசைவ குருமாக்களுடன் சேர்த்து சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

## பயனுள்ள சிறு குறிப்புகள்

1. மழை காலங்களில் உப்பில், ஈரக்கசிவு ஏற்படும். அப்படி ஆகாமலிருக்க சிறிது அரிசியை கலந்து வைக்கலாம்.
2. வறுத்த ரவையில் தோசை சுட்டால் தோசை மொறு மொறுவென்று இருக்கும்.
3. பலகாரங்கள் நமத்துப் போகாமலிருக்க பாத்திரங்களின் அடியில் உப்பு பொட்டலம் ஒன்றை போட்டு வைக்கலாம்.
4. இட்லி, தோசைக்கு மாவு அரைக்கும்போது மிக்ஸியில் அரைப்பதாக இருந்தால் அரிசியைக் கொதிநீரில் ஊறவைத்து அரைத்துப் பாருங்கள். மாவு சீக்கிரமாக அரைந்துவிடும்.
5. வெங்காய பஜ்ஜி செய்யும் போது வெங்காயத்தை வட்டமாக வெட்டிய பின், தோலை உரித்தால் வெங்காயம் தனித்தனியாக பிரியாமல் வட்டமாக இருக்கும்.
6. பாகற்காயில் கொஞ்சம் தயிர் ஊற்றி ஊறவிட்டு சிறிது நேரம் கழித்து வதக்கினால், அதிக கசப்பு இருக்காது. பொரியலும் சுவையானதாக இருக்கும்.
7. இட்லி மீதமாகிவிட்டால் நன்கு உதிர்த்து ஏலக்காய் பொடித்து 5 நிமிடங்கள் ஆவியில் வேகவிட்டு தேங்காய்த் துருவலும், சர்க்கரையும் சேர்த்து சாப்பிட்டால் ருசியாக இருக்கும்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,05,000 Copies Circulated)Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.

TNULM

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

நேரத்தை வீணாக்காதீர்கள்,

உங்களால் முடியும்!
சாதித்துக் கொண்டே இருங்கள்!!

**“தரமான பொருட்களைத் தயாரிப்பதன் மூலம்
எங்களின் மதிப்பும், மரியாதையும் கூடியுள்ளது”**

**எதிர்கால வெற்றி தருணத்திற்காக
இன்றைய ஒவ்வொரு நொடியையும் பயன்படுத்துங்கள்**











மேலும் விவரங்களுக்கு

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்
155 330 ல் தொடர்பு கொள்ளவும்**

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th October 2024 Posted at Patrika Channel, Egmore.











பெயர்: பண்ருட்டி உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்
அளவு: 800 பங்குதாரர்களைக் கொண்டு இயங்குகிறது
தொழில்: முந்திரி பருப்பு வகைகள் உற்பத்தி
ஊராட்சி: பனிக்கன் குப்பம்
வட்டாரம்: பண்ருட்டி
மாவட்டம்: கடலூர்

**முந்திரி பருப்பு வகைகள்:**
**தரம் பிரிக்கப்பட்ட முந்திரி பருப்பு வகைகளுடன் மதிப்புக் கூட்டப்பட்ட முந்திரி பருப்பு பாக்கெட்டுகளும் கிடைக்கின்றன.**
- பெப்பர் முந்திரி
- சில்லி முந்திரி
- சாக்லெட் முந்திரி
- பனை வெல்ல முந்திரி

உங்களின் மொத்த தேவைகளுக்கு தொடர்புகொள்ளவும்:
**கிருஷ்ணா**
**90954 45079**

## தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
### வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP